# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(17.05.2023 முதல் 21.05.2023)

**அறிக்கைஎண்: 39/2023** **தேதி: 16.05.2023**

### அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 - 39 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 28 °செ ஆகவும் பதிவானது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.05.2023 முதல் 21.05.2023).

| கடந்தவாரவானிலை (12.05.2023 முதல் 15.05.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (17.05.2023 முதல் 21.05.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 12/05 | நாள்-2 13/05 | நாள்-3 14/05 | நாள்-4 15/05 | தேதி | நாள்-1 17/05 | நாள்-2 18/05 | நாள்-3 19/05 | நாள்-4 20/05 | நாள்-5 21/05 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 36 | 37 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 40 | 41 | 42 | 42 | 42 |
| 26 | 27 | 27 | 28 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 29 | 29 | 30 |
| 7 | 6 | 4 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 3 | 2 | 1 |
| 80-64 | 78-53 | 73-43 | 70-46 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60-20 | 60-20 | 70-20 | 70-20 | 60-30 |
| 11 | 14 | 18 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 8 | 10 |
| தெற்கு | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் தென் மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தென் தென் மேற்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 17.05.2023 முதல் 21.05.2023 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 40 – 42 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 - 30 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 20 - 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 - 10 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | நாற்றாங்கால் | குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் ஆடுதுறை 47 விதைகளை தேர்ந்தெடுக்கவும் |
| நெல் | நாற்றாங்கால் | கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும். |
| கால்நடைகளுக்கு | மாடு | வெப்பநிலை அதிகரிப்பதால் கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்ப தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |

## குறுஞ்செய்தி

குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் ஆடுதுறை 47 விதைகளை தேர்ந்தெடுக்கவும்

**இயக்குநர்**